பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**31 01 2026** **SATURDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** வரும் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நாளை மக்களவையில் தாக்கல் செய்கிறார்.

**2)** நீடித்த பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்ய கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

**3)** சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில், மினி டைடல் பூங்காவை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

**4)** தமிழகத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு ஆளுங்கட்சியினர் அடைக்கலம் அளிப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

**5)** பக்ரைன் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — ஆஸ்திரியாவின் **Nail Oberleitner** இணை பட்டம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

வரும் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நாளை மக்களவையில் தாக்கல் செய்கிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, மூன்றாவது முறையாக பதவியேற்றபின் அறிவிக்கப்படும் மூன்றாவது பட்ஜெட் இது என்பது குறிப்பிடத்தக்கது.

பொருளாதார வல்லுநர்கள், தொழிற்சங்கங்கள், கல்வி மற்றும் சுகாதாரத்துறையினர், வேளாண் வல்லுநர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் பல கட்டங்களாக ஆலோசனை நடத்தியபின் **2026-27-**ஆம் ஆண்டுக்கான பொது பட்ஜெட்டை திருமதி நிர்மலா சீதாராமன் தயாரித்துள்ளார்.

இதனிடையே, இந்த பட்ஜெட் வர்த்தகத்துறைக்கு உத்வேகம் அளிக்கும் என்று எதிர்பார்ப்பதாக காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த வர்த்தகர் திரு முருகேசன் தெரிவித்தார்.

***(Sound Byte — முருகேசன் - 48 Sec. )***

<<<<<>>>>>

வலிமையான, நீடித்த பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்ய கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்த வேண்டும்

என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

ஹரியானா மாநிலம் சூரஜ்கண்டில் 39-ஆவது சர்வதேச கைவினைப் பொருட்கள் கண்காட்சி திருவிழாவை தொடங்கிவைத்து பேசிய அவர், பல நூற்றாண்டுகளாக நாட்டின் படைப்பாற்றல் அறிவை கைவினைக் கலைஞர்கள் வளர்த்து வந்துள்ளதாக குறிப்பிட்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் தொலைநோக்கு பார்வையினால் நாட்டின் தொன்மை சிறப்பு மிக்க கலாச்சார பாரம்பரியமும், பாரம்பரிய கைவினைப் பொருட்கள் உற்பத்தித் துறையும் வலுப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கைவினைக் கலைஞர்களின் மேம்பாட்டுக்காக கொண்டுவரப்பட்ட விஷ்வகர்மா திட்டத்தின்மூலம், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறினார்.

<<<<<>>>>>

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில், 28 கோடி ரூபாய் மதிப்பிலான மினி டைடல் பூங்காவை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

இதுதொடர்பாக இன்று வெளியிடப்பட்டுள்ள மாநில அரசின் செய்திக்குறிப்பில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த காரைக்குடி மினி டைடல் பூங்கா மூலம் **600** தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு உருவாக்கித் தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி என்ற கொள்கையின் அடிப்படையில் மாநிலம் முழுவதும் தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பு விரிவுபடுத்தப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதுரை, திருச்சி, ஓசூர், பட்டாபிராம் ஆகிய இடங்களில் தொழில்நுட்ப பூங்காக்களை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கவும், புத்தொழில்களை ஆதரிக்கவும் மாநிலத்தில் உள்ள இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களிலும், மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்களில் டன்னுக்கு **48** ஆயிரத்து **860** ரூபாய் விலையில் அம்மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், விற்பனை செய்து பயன்பெறுமாறு மாநில உணவு அமைச்சர் திரு சக்ரபாணி கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தற்போது மாநிலத்தில் **9** நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மாநில அரசு விடுத்த கோரிக்கையை ஏற்று நடப்பாண்டு ஆகஸ்ட் மாத இறுதிவரை கேழ்வரகு கொள்முதலுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதாகவும், இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறும் திரு சக்ரபாணி கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு ஆளுங்கட்சியினர் அடைக்கலம் அளிப்பதால் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், பெருநகரங்கள் முதல், குக்கிராமங்கள் வரை போதைப்பொருட்கள் தடையில்லாமல் கிடைப்பதால், பள்ளி சிறுவர்கள் முதல் கல்லூரி

மாணவர்கள் வரை பெரும் சீரழிவுக்கு உள்ளாவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை தரமணியில் வெளிமாநில இளம் பெண்ணை போதை ஆசாமிகள் சீரழித்து கணவர் கண்முன்னே கொலை செய்யப்பட்ட சம்பவமும், அதை தடுத்த கணவனும் இரண்டு வயது குழந்தையும் அடித்து கொல்லப்பட்டதும், காவல்துறை மீது குற்றவாளிகளுக்கு பயம் இல்லாத நிலை இருப்பதையே காட்டுவதாக கூறியுள்ளார்.

திமுக ஏற்கனவே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தால், போராடிவரும் மக்களின் கோரிக்கைகளை ஏற்காமல் அவர்கள் மீது அடக்குமுறைகளை கையாளுவதாகவும் அவர் குறை கூறியுள்ளார்.

தமிழகம் விரைவில் தேர்தலை சந்திக்க உள்ளதால், மக்கள் மாறுதலை தருவார்கள் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

**39** ஆவது இந்திய சர்வதேச தோல் மற்றும் தோல் பொருட்கள் கண்காட்சி சென்னையில் நாளை தொடங்குகிறது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியில் ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரேலியா, சீனா, இங்கிலாந்து, சவூதி அரேபியா உள்ளிட்ட **66** நாடுகள் பங்கேற்கின்றன.

தோல் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள **362** இந்திய நிறுவனங்களும் இதில் பங்கேற்கவுள்ளன.

ஐரோப்பிய யூனியனும், இந்தியாவும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நிலையில், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக தோல் பொருட்கள் ஏற்றுமதி குழுமத்தின் நிர்வாக இயக்குநர் திரு ஆர் செல்வம் தெரிவித்துள்ளார்.

**(சவுண்ட் பைட் — செல்வம் - 54 செகண்ட்ஸ்)**

<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

அரியலூரில் **16** கல்லூரிகளை சேர்ந்த ஆயிரத்து **297** மாணவர்களுக்கு மடிக்கணினிகளை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் இன்று வழங்கினார்.

-----------

திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணையிலிருந்து பாசனத்திற்காக மாநில அமைச்சர் திரு எ வ வேலு தண்ணீரை திறந்துவைத்தார்.

--------------------

பெரம்பலூர் மாவட்டத்தில் வரும் 2, 3 மற்றும் 4-ஆம் தேதிகளில் வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், பொருட்கள் வழங்கப்பட உள்ளதை சம்பந்தப்பட்டவர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சியர் திருமதி மிருணாளினி கேட்டுக்கொண்டுள்ளார்.

----------------

திருப்பூரில் சட்ட விரோதமாக தங்கியிருந்த பங்களாதேஷை சேர்ந்த நான்கு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பக்ரைன் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — ஆஸ்திரியாவின் **Nail Oberleitner** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, **7-6, 6-4** என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Vasil Kirkov** — நெதர்லாந்தின் **Bart Stevens** இணையை வென்றது.

------------------

மும்பையில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் மகளிர் டென்னிஸ் போட்டியின் தகுதிச்சுற்று முதல் ஆட்டத்தில், இந்தியாவின் அங்கிதா ரெய்னா வெற்றிபெற்றுள்ளார்.

--------------------

இந்தியா - நியூசிலாந்து இடையேயான **5**வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

திருவனந்தபுரத்தில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

--------------

நாமக்கல்லில் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் இன்று தொடங்கிவைத்தார்.

**<<<<<END>>>>>**